# அகநானூறு காட்டும் தொல்குடி

*முனைவர் ஏ. வீரப்பன்*
இணைப் பேராசிரியர், தமிழியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலை நகர்
DOI: https://doi.org/10.5281/zenodo.13783068

***ஆய்வுச்சுருக்கம்***

*பண்டைய மக்கள் தங்களுக்கென குடும்பம் மற்றும் சமூகப் பழக்க வழக்கங்கள், மொழி, நிலம் எனக் கொண்டு தங்கள் வாழ்க்கையைத் தன்னிறைவோடு வாழ்ந்தனர். தங்களுக்கென தனிக் கலைகளும், கடவுள். சமயம் ஆகியவற்றைப் பெற்றிருந்தனர். தனி மனித வாழ்க்கையிலும், உறவு முறைகளிலும், சமூகமாக வாழ்வதிலும் தங்களுக்கென தனியான முறைகள் கொண்டவர்கள். இத்தகு தொல்குடி மக்களின் வாழ்க்கை முறைகளை அகநானூறுவழி ஆராயப்பட உள்ளது.*

***திறவுச் சொற்கள்:*** *சங்க இலக்கியம், அகம், அகநானூறு, குடி, அண்டர், கள்வர், மழவர், இளையர், மழவரும் ஆகோளும்.*

**முன்னுரை**

*சங்க இலக்கியம் பழமை வளமும், புதுமை நலமும் பொருந்தியது. சங்க கால மக்களின் வாழ்க்கையை எடுத்துக்காட்டும் பெட்டகமாக சங்க இலக்கிய நூல்கள் திகழ்கின்றன. தமிழரின் தொன்மைக்கும், பெருமைக்கும் சான்றுகளாக இருப்பன எட்டுத்தொகையும் பத்துப்பாட்டுமாகும். சங்க இலக்கியங்கள் என்று போற்றப்படும் தொகையும், பாட்டும் அகம், புறம் என்ற இரண்டு ஒழுக்கங்களை அடிப்படையாகக் கொண்டு பாடப்பட்டுள்ளன. இவற்றுள் அகம் அன்பினையும், புறம் விரத்தினையும் எடுத்துரைப்பதால் அக்காலத் தமிழர்கள் காதலையும் விரத்தையும் தம் இரு கண்களாகப் போற்றினர் என்பதை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறிய முடிகிறது. அக வாழ்க்கையை விளக்கும் நூல்களில் ஒன்று அகநானூறு. சில தொகை நூல்கள் அகம் என்ற பொருள் பற்றிய தாயினும் இந்நூலுக்கு மட்டுமே அகம் என்ற பெயராயிற்று. வெவ்வேறு காலகட்டங்களில் வேறு வேறு இடங்களில் தோன்றிய பல புலவர்கள் பாடிய நானூறு பாடல்களின் தொகுப்பு அகநானூறு எனப்படுகிறது. அவற்றுள் காணலாகும் தொல்குடி குறித்துக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

*தொன்றுதொட்டு நீண்ட காலமாக ஒரே நிலப்பகுதியில் பரம்பரை, பரம்பரையாய் வாழ்ந்து வருபவர்களே பழங்குடிகள் எனப்படுகிறார்கள். இவர்கள் தங்களுக்கென தனிமொழயும் குடும்ப மற்றும் சமூகப் பழக்க வழக்கங்களும் கொண்டுள்ளனர். மேலும் அப்பகுதிகளிலுள்ள செடி, கொடி,மரம், விலங்குகளைச் சார்ந்து தன்னிறைவான வாழ்க்கை வாழ்கிறார்கள். இன்றும் ஆஸ்திரேலியா, ஆப்பிரிக்கா, ஜப்பான், பசிபிக் தீவுகள், இந்தியா உள்ளிட்ட உலகின் பல பகுதிகளில் பழங்குடி மக்கள் உள்ளனர். உலகிலேயே பழங்குடி மக்களின் எண்ணிக்கையில் ஆப்பிரிக்கா கண்டமே முதலிடத்தில் உள்ளது. அடுத்தபடியாக இந்தியா இரண்டாம் இடத்தில் உள்ளது. இந்திய மக்கள் தொகையில் எட்டு சதவிகிதத்திற்கும் மேல் பழங்குடிகள் உள்ளனர். பழங்குடி பற்றிய ஆய்வுகள் நீண்ட காலமாக நடைபெற்று வருகின்றன. பொதுவாக இந்திய வரலாற்றிலும் குறிப்பாகத் தமிழ்நாட்டு வரலாற்றிலும் பழங்குடிப் பண்பாடு பெரும் செல்வாக்கைப் பெற்று வந்துள்ளது. 1955 ஆம் ஆண்டு மக்கள்*

கணக்குப்படி இந்திய மக்கள் தொகையில் 1000 பேருக்கு 54 பேர் பழங்குடிகள் என்று கணக்கிடப்பட்டுள்ளது. இன்று நாகரீகக் குடிகள் என்று கூறிக்கொள்பவர்களிடம் கூட பழங்குடிப் பண்பாடு செல்வாக்குப் பெற்றிருப்பதைக் காண முடிகின்றது.[1]

பழங்குடி மக்களிடையில் இரத்த உறவுள்ள கூட்டத்தைக் குலக்குறிப் (Totemic) பெயரால் அழைக்கப்படுவது வழக்கம். சான்றுக்கு பண்டைய சோழர்கள் கோழியர்[2] என்று அழைக்கப் பெற்றனர். அவர்கள் தலைநகரமான உறையூர் கோழி என்று அழைக்கப்பெற்றது என்பதை,

**சோழ நல் நாட்டுப் படினே, கோழி**
**உயர் நிலை மாடத்து, குறும்பறை**

என்ற புறநானுற்றுப் பாடலால் அறியலாம். இன்று சில சாதியாரிடம் குலக்குறிப் பெயர்கள் உள்ளன. காடை என்ற குலக்குறி கொங்குநாட்டில் வழங்கப்பெறுகின்றது.[4] காடையூர் என்ற ஊரும் இந்தக் குலக்குறிப் பெயரால் வழங்கப்பெறுகின்றது. உயர்ந்த நாகரிகக்குடி என்று கருதப்பெறும் பிராமணர்களிடையில் வழங்கும் கோத்ரப் பெயரும் கூட குலக்குறிப் பெயர்களே5 சான்றுக்குக் காஸ்யா கோத்ரத்தைக் கூறலாம். காஸ்யா என்றால் ஆமை என்று பொருள்6 அதனால் காஸ்யா கோத்ரத்தினர் ஆமைக்குலத்தினர் என்று கொள்கின்றனர். இக்கட்டுரையில் தொல்குடி என்ற சொல்லே பயன்படுத்தல் பெறுகின்றது. காரணம் பொதுவாக சங்க இலக்கியத்திலும் குறிப்பாக அகநானூற்றிலும் தொல்குடி என்ற சொல்லே பயன்படுத்தப்பெறுகின்றது. அதனால் அச்சொல் ஈண்டு எடுத்தாளப்பெறுகின்றது.

## குடி

குடி என்ற சொல் எல்லாத் திராவிட மொழிகளிலும் உள்ள சொல். திராவிட மொழிகள் அனைத்திலும் குடி என்பது இரத்த உறவுள்ள மக்களின் கூட்டத்தை குறித்து வருகிறது.[7] பிற்காலத்தில் குடி என்பது பல்வேறு பொருள்களைத்தரத் தொடங்கியது.

சங்க இலக்கியத்தில் தொல்குடி என்ற சொல் பல இடங்களில் பயின்று வருகின்றது. தொல்குடி என்பது ஆங்கிலத்தில் Lineage என்று பெயர்க்கப் பெறுகின்றது. தற்காலத்தில் வம்சாவழி என்று கூறப்பெறுகின்றது. ஆனால் தொல்குடி, வம்சாவழி, lineage ஆகிய சொற்கள் ஆட்சி செய்த குடிகளையே குறித்தது. தொல்குடி என்பதற்குத் தற்காலத்தில் தொல்இனம், இனக்குழு, ஆதிவாசிகள், கிரிஜனங்கள் (மலைச்சாதியினர்) என்ற பல்வேறு பெயர்களால் அழைக்கப் பெறுவதையும் பார்க்கிறோம். பழங்குடி என்பதற்கு எத்தனையோ பொருள் மாற்றங்கள் ஏற்பட்டாலும் சங்க இலக்கியத்தில் பயன்படுத்தப் பெறும் தொல்குடி என்ற சொல்லே பயன்படுத்தப் பெறுகின்றது.

குடி என்பது கொதவ மொழியில் க்விஸ் என்று வழங்கப் பெறுகின்றது. அந்த மொழியில் அச்சொல்லுக்கு இரத்த உறவுள்ள கூட்டம் என்று பொருள். எருமைப்பட்டி கன்றுகள், குடி வழியினர் என்ற பொருள்கள் கூறப்பெருகின்றது.[8] வேதத்தில் கோத்ர என்ற சொல் இரத்த உறவுள்ள குழு, மாடுக்கொட்டில் என்று பொருள்கள் உள்ளன.[9] தோதவ மொழி சொல்லும் வேதத்தில் பயின்று வரும் கோத்ர என்ற சொல்லும் ஒரு பொருள் கருதிய பல சொற்கள் என்று கருதி, அவர்கள் குடி என்ற சொல்லும் கோத்ர என்ற சொல்லும் கால்நடை வளர்ப்பு சமூகத்தில் உருவான சொல்[10] என்று செனவே இரத்னே கூறுவார்.

## அகநானூற்றில் தொல்குடிகள்

இந்நூலில் அண்டர், அதியர், ஆரியர், இடையர், எருமை, கடம்பர், களையர், காரி, கொங்கர், கோசர், கோவலர், கோழி(யர்) தொண்டையர், பூழியர், மழவர், மறவர், வடுகர் போன்ற தொல் குடிகள் குறிக்கப் பெறுகின்றனர்.

### அண்டர்

**அண்டர் என்ற குடியினர் அகநானூற்றில்**
**அண்டர் மகளிர் தண் தழை உடீஇயர்**
**(அகம். 59:5)**

*எனக் குறிக்கப் பெறுகின்றனர். மேலும் அகநானூற்றில் அண்டர் மகன் குறுவழுதியார் என்ற புலவர் இருபாடல்களைப் (150, 228) பாடியுள்ளார். இங்கு அண்டர் மகன் என்பது அண்டர்க்குடிக்குத் தலைவன் என்று பொருள். அண்டர் பழங்குடிநிலையிலேயே வாழ்ந்தனர். அவர்கள் கால்நடை வளர்ப்பில் சிறப்புற்றிருந்தனர். அவர்களுள் கழுவுள் என்பான் அண்டர்களுக்குத் தலைவன் என்றும் அண்டர் தலைவனான கழுவுள் ஆண்ட பகுதி தமிழகத்தின் வடபகுதி*[11] *என்று கூறுவார் துரை அரங்கசாமி. பெருஞ்சேரல் இரும்பொறை அண்டர் தலைவன் கழுவுளை வென்ற செய்தியை,*

***வாழ்நர் கழுவுள் தலைமடங்க,***
***பதி பாழாக வேறு புலம் படர்ந்து,***
***விருந்தின் வாழ்க்கையொடு பெருந் திரு அற்றென,***
***அருஞ் சமத்து அரு நிலை தாங்கிய புகர்***[12]

*என்ற பாடலால் அறியலாம்.*

*கழுவுள் என்பான் எருதுகளும் பசுக்களும் கன்றுகளும் நிரம்ப உடையவன். அவனுடைய வீரர்கள் இடைவிடாமல் படையெடுத்துச் சென்று புலவு நாற்றம் வீசும் தங்கள் வில்லைக் கொண்டு பகைப்புலத்திலிருந்து ஆநிரைகளைச் கவர்ந்து வருவார்கள்.*

*சேரமான் இவர்களை வென்று ஆநிரைகளைப் பற்றினான் என்பதை,*

***அணங்குடைக் கடம்பின் முழுமுதல் தடித்து;***
***பொருள் முரண் எய்திய கழுவுள் புறம் பெற்று;***
***நாம மன்னர் துணிய நூறி;***
***கால் வல் புரவி அண்டர் ஓட்டி***[13]

*என்ற பாடல் வழி, கழுவுள் நாட்டில் பாலும் தயிரும் ஆயர்மகளிரால், தயிரினின்று எடுக்கப்பெறும் வெண்ணையும் நிரம்பியிருக்கும் என்பதும் அவனது காமூரை சேரமானின் வீரர்கள் பாழாக்கினர் என்பதும் அறியப் பெறுகின்றது. ஆவின் பயனாகிய பாலையும் தயிரையும் கொண்டு செல்வச்செருக்குடன் வாழ்ந்த மக்களில், தலைவன் கழுவுள், சேரமானோடு பெருந்திரு நாட்டிலே கேட்ட தயிர் கடையும் மத்தின் ஒலி ஊரின் ஒவ்வொரு நாளும் விருந்தினரை உபசரித்து வாழ்ந்த, அவனுடைய மக்கள் தங்களுடைய அளவற்ற செல்வத்தை விட்டுவிட்டுப் பிற நாடுகளுக்குத் தப்பியோடினர் என்பதை,*

***கன்றுடை ஆயம் தரீஇப் புகல் சிறந்து***
***மத்துக் கயிறு ஆடா வைகற் பொழுது நினையூஉ,***
***ஆன் பயம் வாழ்நர் கழுவுள் தலைமடங்க***
***விருந்தின் வாழ்க்கையோடு பெருந்திரு அற்றென***[14]

*என்ற பாடல் காட்டுகின்றது.*

### கள்வர்

*கள்வர் என்போரை, களவர் என்று கூறுவாரும் உளர். ஆனால் கள்வர் என்று கூறுவதே சிறந்தது*[15] *கள்வர் என்ற பெயர் எப்படி உருவாயிற்று என்று கூறுவது கடினமானது. நிரைக் கவரச்செல்லும் போது கள்ளைக் குடித்து விட்டுச் சென்றமையால் இந்தப் பெயர் உருவாயிற்றா? அல்லது தோன்றிய பழங்குடி மக்களின் தொகுதியா? அல்லது கள்ளை உற்பத்தி செய்த பழங்குடியா? என்ற கேள்வி எழுகின்றது. கோசர் என்ற முதல் பெயர் கோய் என்ற அடிச்சொல்லான கள் பாத்திரம் கோய் என்று பொருள் தரும் சொல்லிலிருந்து உருவானதாகக் கருதப்படும். கோசர் என்ற சொல்லை மேற்காட்டிய களவர் என்ற சொல்லோடு ஒப்பு நோக்கலாம். அதன்படி கள் என்பதனை அடிப்படையாக கொண்டு தோன்றிய பழங்குடி கள்வர் என்பதாகும்*[16] *என்பர்.*

### மழவர்

*ஆகோள் பூசலுக்கு இளம் வீரர்கள் தேவைப்பட்டனர். அவர்களைச் சங்கப் புலவோர் மழவர், இளையர் எனக் குறிப்பிட்டனர். கால்நடை வளர்ப்பு சிறந்திருந்தமையால் அந்தக் கால்நடைகளைப் பாதுகாக்கும் வீரர்களும் கானகத்தில் தங்கியிருந்தனர். இளையர், மழவர், ஆடவர், கள்வர், மறவர், ஆகியோர் கானத்தில் இருந்தமை பற்றிய பல பாடல்கள் உள்ளன.*

*இளைஞர்கள் சினம் கொண்டு அம்பை எய்து தட்டையைப் புடைத்து ஒலித்தலால் கானமெல்லாம் கல்லெனும் ஓசை உண்டாயிற்று.*

***எரி சினம் தவழ்ந்த இருங் கடற்று அடைமுதல்***
***கரி குதிர் மரத்த கான வாழ்க்கைஇ***
***அடு புலி முன்பின்இ தொடு கழல் மறவர்***
***தொன்று இயல் சிறுகுடி மன்று நிழற் படுக்கும்***
***(அகம். 75:4-7)***

***நுழை நுதி நெடு வேல், குறும் படைஇ மழவர்***
***முனை ஆத் தந்துஇ முரம்பின் வீழ்த்த***
***வில் ஏர் வாழ்க்கை விழுத் தொடை மறவர்***
***வல் ஆண் பதுக்கைக் கடவும் (அகம். 35:4-7)***

*என்பதாலும்,*

***சில் பரிக் குதிரை, பல் வேல் எழினி***
***கெடல் அருந் துப்பின் விடுதொழில் முடிமார்,***
***கனை எரி நடந்த கல் காய் கானத்து***
***வினை வல் அம்பின் விழுத் தொடை மறவர்***
***(அகம். 105:10-13)***

***வெண் நுனை அம்பின் விசை இட வீழ்ந்தோர்***
***எண்ணு வரம்பு அறியா உவல் இடு பதுக்கை***
***(அகம். 109:7-8)***

*என்பதாலும் மழவர் பற்றிய செய்திகள் கிடைக்கின்றன.*

*மழவர் கானத்தில் நிழலில் தங்கி இளைய பசுவினைக் கொன்று தின்பர் கானத்தில் வளர்க்கப் பெற்ற ஆவினத்தை மறவர்கள் மழவர்கள் கவர்ந்து செல்வது பற்றிப் பல பாடல்கள் விவரித்துள்ளன. எழினியின் மறவர்கள், பகைவர் புலத்தில் உள்ள ஆநிரைகளைக் கவர கானத்தில் விரைந்து செல்வர். அச்சம் தரும் கானத்துக் சிறுகுடி மறவர்கள் ஏறு கோட்பறையை ஒலித்தலால் ஆண்பருத்து தன் சிறகினை விரித்து பறந்து செல்லும். கானத்தில் நடுகற்கள் நடப்பெற்றிருந்தன. இந்த நடுகற்கள் மாடு பிடி சண்டையில் மாய்ந்த மறவர், இளையர், ஆடவர் ஆகியோருக்காக எடுக்கப்பெற்றன. இவை பழங்குடி மக்களின் குலதெய்வமாக வழிபடப்பட்டதையும் பார்க்கின்றோம். மலைபடுகடாம் கானகத்தில் உள்ள நடுகற்கள் பற்றிக் குறிப்பட்டுள்ளது. அகநானூற்றில் ஆடுமேய்க்கும் இடையர் கோவலர் இளைஞர் ஆகியோர் நடுகல்லை வழிபட்டனர் என்று கூறுவது எடுத்துக் காட்டத்தக்கது.*

*சங்க இலக்கியத்தில் மழவர்களைப் பற்றிய குறிப்புகள் மிகுதியாக வருகின்றன. சேரன் மன்னர்கள் மழவர் மேய்மமளை என்று கூறப்படுவதிலிருந்து மன்னனுக்குக் காவல் வீரர்களாக மழவர் விளங்கினர் என்பது விளங்கும். மேலும் அதியமானையும் ஓரியையும் மழவர் பெருமகன் என்று சங்கப்புலவர்கள் பாடுகின்றனர். மழவர்களின் தலைவன் என்று இதற்குப் பொருள்.*

*தொடக்கத்தில் மழவர்கள் கால்நடைகள் தங்கியிருந்த காவற் காடுகளையும் தொழுக்களையும் காவல் புரிந்த பணியில் ஈடுபட்டியிருந்தனர். ஒரே பூசலில் மழவர்கள் வெட்சியராகவும், மறவர்கள் கரந்தையராகவும் நின்று போரிடும் காட்சியை அகப்பாடல் ஒன்று கூறும். மழவர்கள் நிரை கவர்ந்தபோதுஇ மறவர்கள் அதனை மீட்டனர். மழவர்கள் ஒரிடத்தில் தங்காமல் சுற்றி அலைந்தவர்கள் என்பர். ஆனால் அவர்கள் காவற்காடுகளையும், குறும்புகளையும் பாதுகாக்கும் வீரர்களாகத் தொண்டை மண்டலத்திலும் கரூவூர் நாட்டிலும் வாழ்ந்தனர். முதலாம் சிம்மவிஷ்ணு மறவர்களை வென்றதாகக் கூறப்படுகின்றான்.*

### இளையர் - இளை

*இளையர் பற்றி கி.மு. 2 ஆம் நூற்றாண்டுத் தமிழ் - பிராமிக் கல்வெட்டில் கூறப்படுகின்றது. இளையர் என்ற சொல்லுக்கு இளைரை துரை அரங்கசாமி இளம் வீரர் (பயிற்சியாளர்) என்று கூறுகிறார்.[17]*

*இளையர் என்ற சொல்லுக்கும் போருக்குமிடையிலான தொடர்பு தொன்மையானது கால்நடை வளர்ப்புடன் தொடர்புடையது இளை என்ற சொல் பதிற்றுப்பத்தில் காவல் தொழில் என்ற பொருளில் வழங்கி உள்ளது. சிலப்பதிகாரத்தில் கட்டு வேலி என்றும் காவற் காடு என்றும் இரு பொருளில் வழங்கப்படுகின்றது.*

### மழவரும் ஆகோளும்

*அகநானூற்றில் மழவர்கள் நிரைகவர்ந்தமை பற்றி பாடல்கள் குறிக்கின்றன. இவர்கள் சில நேரங்களில் ஆறலைக் கள்வர்களாவும் செயல்பட்டுள்ளனர். மழவர்கள் கோபக்குறி கொண்ட கண்களையுடையவர்கள். இரவு நேரத்தில் தீப்பந்தங்களுடன் நிரைக் கவரச்*

சென்றனர். குறும்புகளுக்குச் சென்று கன்றுகளுடன் கொள்ளையடித்தனர்.

**செங் கண், மழவர்**
**வாய்ப் பகை கடியும் மண்ணொடு கடுந் திறல்**
**தீப் படு சிறு கோல் வில்லொடு பற்றி**
**நுரை தெரி மத்தம் கொளீஇஇ நிரைப் புறத்து**
**அடி புதை தொடுதோல் பறைய ஏகி,**
**கடி புலம் கவர்ந்த கன்றுடைக் கொள்ளையர்**
**(அகம். 101:5-10)**

மற்றொரு அகப்பாடலில் மழவர்கள் நிரை கவர்பவர்களாகவும். மறவர்கள் நிரை மீட்பவர்களாகவும் காட்டப்பெறுகின்றனர். புகழ் மிக்க மழவர் கையில் அம்பு உள்ளது. அது எய்யப் பெறும்போது விண் என்ற ஒலியுடன் பாய்ந்து செல்லும், பகலிலே நிரையைக் கவர அம்பெய்கின்றனர். ஆநிரைகளைக் கவர்ந்து செல்லும்போது நடக்க முடியாத கன்றுகள் பின்தங்கி விடுகின்றன. தாயின் பிரிவால் அவை கண்ணீர் விடுகின்றன. அவற்றின் கண்ணீரைத் துடைக்க அதன் உரிமைகோரும் மறவர்கள் ஆநிரைகளை மீட்டு வருகின்றனர். அவ்வாறு மீட்டவர்களில் சில மறவர்கள் மாண்டு போகின்றனர் என்ற செய்தியை,

**வீளை அம்பின் விழுத்தொடை மழவர்**
**நாள்ஆ உய்த்த நாமவெஞ் சுரத்து**
**நடைமெலிந்து ஒழிந்த சேண்படர் கன்றின்**
**கடைமணி உகுநீர் துடைத்த ஆடவர்**
**(அகம். 131:6-9)**

என்ற பாடலால் அறியலாம்.

**முடிவுரை**

- சங்க காலத் தமிழரின் வாழ்க்கை, மனித சமூகத்திற்கு ஒரு சான்றாக அமைகிறது. பழந்தமிழரின் உணர்வுகளையும், எண்ணங்களையும் காட்டும் விதமாக இலக்கியங்களில் தொல்குடி பற்றிய பதிவு செய்யப்பட்டுள்ளது.
- பழந்தமிழர்கள் விட்டுச்சென்ற பண்பாட்டு எச்சங்கள் இன்றும் சமுதாயத்திற்கு ஒழுங்குமுறையான வாழ்க்கை முறையினை எடுத்துக் காட்டும் விதமாக அமைகிறது. மறவர்கள் கவர்ந்த ஆநிரைகளைக் கொன்று தின்றார்கள்.
- தொல்குடிப் பண்பாடு தமிழரின் மிகப்பழமையான பண்பாட்டினைச் சுட்டுகிறது. அகநானூறு அதற்குரிய சிறந்த சான்றுகளைத் தந்துள்ளது.
- அண்டர், கள்வர், மழவர், மறவர் ஆகியயோரும் அவர்களது இருப்பிடங்களான கான், குறும்பு, புறவு, அரண், அருப்பம், மிளை, முனை ஆகியவை மழவரின் கொற்றவை வழிபாடும் வழிப்பறக்கொற்றையும் அகநானுற்றில் அரிய செய்திகளாகக் கிடைத்துள்ளன.
- தொல்பழங்குடியினர் ஆகோள் பூசலில் ஈடுபட்டமையை மற்ற நூல்களைக் காட்டிலும் அகநானூறு பல இடங்களில் குறிப்பிட்டுள்ளது.

**அடிக்குறிப்பு**

1. தினமணி - சிறுவர்மணி வார இதழ், ப. 7.
2. மொ.ஆ. துரை அரங்கசாமி. சங்க காலச் சிறப்புப் பெயர்கள் ப.188.
3. புறம். 67:8-9.
4. க. கிருஷ்ணசாமி, கூட்டமும் திருமணமும், பிற்சேர்க்கை, பக்கம் இல்லை.
5. தேவி பிரசாத். சட்டோபாத்யாயா உலகாயுதம் (பண்டைய இந்தியப்பொருள் முதல் வாதம் பற்றிய ஆய்வு), ப. 265.
6. மேலது. ப.265.
7. Dravidian Etymological Dictionary, No.1455.
8. மேலது.
9. தேவி பிரசாத், சட்டோபாத்யாயா உலகாயுதம் (பண்டைய இந்தியப்பொருள் முதல் வாரம் பற்றிய ஆய்வு), ப.694.
10. Sudharsan Senevaratne, Kuti and Nadu in Naga Banthanam, P. 101&120.
11. மொ.அ. துரை அரங்கசாமி, சங்க கால சிறப்பு பெயர்கள், ப.274.
12. பதிற். 71:17-20.
13. மேலது. 88:6-9.
14. மேலது. 71:13-19.
15. மொ.அ. துரை அரங்கசாமி, சங்க கால சிறப்பு பெயர்கள், ப.286.
16. மேலது, 283 - 284.
17. மொ.அ. துரை அரங்கசாமி, சங்க கால சிறப்பு பெயர்கள், ப.254.